# ஓடிக்கொண்டே இருக்கும் உற்சாக நதிவாழ்க!

# உழைத்துக் கொண்டே இருக்கும் உதயநிதி..நீ வாழ்க!

திராவிட வரலாற்றுத்
தீபத்தைக் கரமேந்தி
இராப்பகல் பாராது
இளமைநலம் தீராது
குறிக்கோளில் மாறாது
குன்றைப்போல் நடந்துவரும்

அரியேறு தளபதியின்
அறப்போர்க் களமெங்கும்
சுற்றிச் சுழல்கின்ற
சூறாவளியே!

சுயமரியாதை வானில்
சுடர்விட்டுப் பிரகாசிக்கும்
சூரிய ஒளியே!

இளைஞர் உலகம்
நம்பிக்கையோடு
நாளும் போற்றும்
நாமாவளியே!
நீ வாழ்க!
நீடூழி வாழ்க!

இமயத்தை அதிர்விக்கும்
இன்னொரு தளபதியாய்
எங்கட்கு வாய்த்த
இதய நிதியே!

போகும் இடமெங்கும்
புகழ்நட்டு வருகின்ற
புதிய நிதியே!

சகலத்தையும் வழங்கும்
சங்கநிதி பதுமநிதி போல
எங்களுக்கு வாய்த்த
இளைய நிதியே!

தாய்மார்கள் நெஞ்சத்தில்
தனயனாய் வீற்றிருக்கும்
தங்கத் தமிழ்நிதியே!

தமிழ்நாட்டு அரசியலில்
புதியவிதி படைக்கப்
புறப்பட்டிருக்கும்
புன்னகை நிதியே..

ஓடிக்கொண்டே இருக்கும்
உற்சாக நதியே!
உழைத்துக்கொண்டே இருக்கும்
உதய நிதியே!
கூடிக்கொண்டே இருக்கும்
கொள்கைக் கூட்டத்தின்
அசைக்க முடியாத
அதிபதியே... நீ வாழ்க!

காவிரியாற்று மணலினும்
பலவாக
களங்கண்ட மூவேந்தர்
காவியப் புகழாக
பாரெலாம் வியக்கும்
சீரெலாம் பெற்றுச்
செந்தமிழைப் போல்
செழித்து வாழ்க!

மானம் மிகுந்த
மரபணுக்களின்
சேர்க்கையில் பிறந்த
சிங்கக் குருளையே!

வானமாய் விரிந்து
ஞானமாய்ப் பரந்து
நிதானமாய் வளர்ந்து
நித்திலக் குன்றமாய்
நிமிர்ந்து நிற்கும்
எங்கள் தளபதியின்
இதயத் துடிப்பே!

எவரும் கருதாத
எழுச்சி மழையாகி
மக்கள் உளங்களில்
மகிழ்ச்சி மழையாகி
மேன்மை தரவந்த
மேக வெடிப்பே!

ஒருகல் எடுத்து
உயர்த்திப் பிடித்து...
'சிறுகல் தானே' எனச்



சிரித்தவர் முன்னே
சிம்ம சொப்பனமாய்ச்
சிலிர்த்து நின்று,

செங்கல் மூலம்
செங்கோட்டைக்குச்
சேதிகள் சொன்ன
திராவிடப் புயலே!

சனாதன வாதத்தைச்
சாய்க்கும் முனைப்போடு
களத்தினில் இறங்கி—
கலைஞர் எடுக்கும்
கைவாளின் வேகத்தில்
சொற்களைத் தொடுத்துச்
சுடர்விட்ட ஏகலைவா..!

வருங்காலத் தலைமுறையை
வாழ்விக்க வந்திருக்கும்
வாலிபத் தலைவா!

அறம்போல வார்த்தைகளை
அளவாகத் தீட்டி
அளவில்லா வெற்றிகளை
அன்றன்றும் ஈட்டி

அங்கங்கும் இளைஞர்படை
அத்தனையும் கூட்டி
அனைவருக்கும் கொள்கைத்தீ
அடிநெஞ்சில் மூட்டி
'நாளைக்கும் நாம்'என்னும்
நம்பிக்கை ஊட்டி—
ஆட்சிக்கே மாட்சிதரும்
அழகுடன் காட்சிதரும்
அன்புமிகு சின்னவரே..!
மக்களின் மனமாளும்
மாண்புமிகு மன்னவரே!

இனத்துக்கும் மொழிக்கும்
இயக்கத்தின் மிளிர்வுக்கும்
தினத்துக்கும் போராடும்
தினவோடும் கனவோடும்
களமாடி நிற்கும்
கலைஞரின் பேரனே!
கருத்தியல் வீரனே!
பகைப்புலம் யாவையும்
நகைப்புலம் ஆக்கி
நடையிடும் தீரனே!

இலக்கைக் குறிவைத்து
இதயத்தில் நெறிவைத்து
அரசியல் பொறிவைத்து,
பெரியாரில் அண்ணாவில்
அசையாமல் அடிவைத்து
கலைஞரை முன்வைத்து
தளபதியைக் கண்வைத்து
அயிற்சுவை துயிற்சுவை
அனைத்தையும் பின்வைத்து—
மாபெரும் போர்க்களத்தில்
மலர்ச்சியுடன் நிற்கும் நீ...

ஆயிரம் பிறைகண்டும்
ஆகாயம் போல் வாழ்க!
பாயிரம் பாடுகிறேன்
பாராண்டு நீ வாழ்க!

தாயினும் அன்புடைய
தமையனாய் வாழ்த்துகிறேன்
வாயெலாம் மணக்கின்ற
வைணவத் தமிழ்கொண்டு
பாசப் பெருக்கோடு
பல்லாண்டு பாடுகிறேன்!

காற்றுக்கும் வழிகாட்டும்
கருத்தோட்டம் நீபெறுக!
நேற்றுக்கும் இன்றுக்கும்
நீரோட்டம் நீதருக!

வெற்றிகளின் தேசத்தில்
வேரோட்டமாய் எழுக!

பொழுதெல்லாம் பூக்கின்ற
பூந்தோட்டமாய் வளர்க!

காலத்தை வென்றெடுத்த
கண்ணியத் தலைவர்களின்
புண்ணியப் பாதையிலே
பொலிவோடு நடைபயில்க!

திக்களந்து பெருங்குரலில்
திராவிடத்தைப் பயிற்றுவிக்கும்
நம்முதல்வர் ஆசியுடன்
நல்லவனே நீ வாழ்க!

மகுடத்தில் ஒளிவீசும்
மாணிக்க மணியாகி
சிகரங்கள் பலதொட்டுச்
செம்மாந்த புகழ்பெற்று

வரலாற்றுப் பதிவோடு
வல்லவனே நீ வாழ்க!
வருகின்ற களமெங்கும்
வாகைசூடி நீ வாழ்க!



டாக்டர் **எஸ். ஜெகத்ரட்சகன்** எம்.பி.
மேனாள் ஒன்றிய இணையமைச்சர்

---

## திருவண்ணாமலை கிரிவலப் பாதையில்

# தூய்மை அருணை சார்பில் 20 குளங்கள் சீரமைப்பு!

### பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பணியை தொடங்கி வைத்தார்!

திருவண்ணாமலை, நவ.26–

திருவண்ணாமலை தூய்மை அருணை அமைப்பு, மாவட்ட நிர்வாகம் சார்பில் கிரிவலப் பாதையில் உள்ள 20 குளங்கள் சீரமைக்கப்படவுள்ளது. பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு முதலில் வறட்டுக் குளத்தை சீரமைக்கும் பணியினை தொடங்கி வைத்தார். தூய்மை அருணை தன்னார்வலர்கள் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு சீரமைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்கானோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர் வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து கிரிவலப்பாதையில் உள்ள 20 குளங்களை தூய்மை அருணை அமைப்பு மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் சீரமைப்பது என தீர்மானிக்கப்பட்டது. அதன் முதல்கட்டமாக 25.11.2024 திங்கட்கிழமை அன்று காலை 7.00மணிக்கு, திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் உள்ள வறட்டுக் குளத்தை சீரமைக்கும் பணியினை, பொதுப்பணித் துறை அமைச்சரும், தூய்மை அருணையின் அமைப்பாளருமான எ.வ.வேலு தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:–

திருவண்ணாமலை புகழ்பெற்ற ஒரு ஆன்மீக பூமி. அண்ணாமலையார் திருக்கோவிலுக்கு பல இலட்சக்கணக்கான ஆன்மீகப் பெருமக்கள் வந்த வண்ணம் உள்ளனர். வெளிநாடு, வெளி மாநிலங்கள், வெளி மாவட்டங்களிலிருந்து அண்ணாமலையாரை தரிசித்துவிட்டு, 14 கி.மீ., கிரிவலம் வருவது வழக்கம்.

எனவேதான் திருவண்ணாமலை மாட வீதி, கிரிவலப்பாதை, நகரப் பகுதி அனைத்தும் தூய்மையாக இருக்கவேண்டும் என்ற நோக்கில் தூய்மை அருணை என்ற அமைப்பை 7 ஆண்டு காலத்திற்கு முன்பே தொடங்கி நடத்தி வருகிறோம். இந்த அமைப்பிற்கு நான் அமைப்பாளர், நான்கு மேற்பார்வையாளர்கள், நாற்பது ஒருங்கிணைப்பாளர்கள், ஏழு மாட வீதி ஒருங்கிணைப்பாளர்கள், ஆயிரம் தூய்மைக் காவலர்கள், ஒவ்வொரு ஞாயிறு அன்றும் குப்பைகளை அகற்றுவது, கால்வாய்கள் சுத்தம் செய்தல் மற்றும் மரக்கன்றுகள் நடுதல் என்ற பணியினை செய்து வருகிறோம்.

அதன் ஒரு பகுதியாக கிரிவலப் பாதையில் உள்ள 20 குளங்கள் முட்புதர்களாகவும், செடிகள் வளர்ந்த காரணங்களால், மாவட்ட நிர்வாகம் சார்பில் 100 நாள் வேலை பணியில் ஈடுபடும் பணியாளர்களும், தூய்மை அருணை அமைப்பினரும் இணைந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் தெ.பாஸ்கரபாண்டியன் தலைமையில் கிரிவலப்பாதையில் உள்ள 20குளங்களை தூர்வார வேண்டும், சுத்தப்படுத்த வேண்டும் முடிவு செய்யப்பட்டு, முதல் குளத்தை சீரமைக்கும் பணியினை தொடங்கி இருக்கிறோம்.

இவ்வாறு செய்தியாளர்களிடம் அமைச்சர் எ.வ. வேலு அவர்கள் கூறினார்.

ஒரு மணி நேரத்தில் வறட்டுக் குளத்தில் இருந்த செடி, கொடி, முட்களை அகற்றியும், மண்மேடுகளை அகற்றியும் மற்றும் தூய்மைப் பணிகள் நடைபெறுவதைக் கண்டு கிரிவலம் சென்ற ஆன்மீகப் பெருமக்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

தூய்மைப் பணியில் மாவட்ட ஆட்சித் தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், திட்ட இயக்குநர் இரா.மணி, மாவட்ட வருவாய் அலுவலர் இரா.இராமபிரதீபன், தூய்மைப் பணியில் தூய்மை அருணையின் மேற்பார்வையாளர்கள் டாக்டர் எ.வ.வே.கம்பன், இரா.ஸ்ரீதரன், அறங்காவலர் குழுத் தலைவர் இரா.ஜீவானந்தம், உதவி ஆணையர் ஜோதி, ப.கார்த்திவேல்மாறன், ப்ரியா ப.விஜயரங்கன், ஒருங்கிணைப்பாளர்கள் அ.கோவிந்தன், செ.எழில்மாறன், எஸ்.கண்ணதாசன், ஏ.ஏ.ஆறுமுகம், ம.வினோத்குமார், எஸ்.கே.டி.வீரா, வழக்கறிஞர்கள் ம.செந்தில், கிருஷ்ணமூர்த்தி, பா.அரிகிருஷ்ணன், சு.ராஜாங்கம், வழக்கறிஞர் ந.சீனுவாசன், இரா. அருண், மெட்ராஸ் கே.சுப்பிரமணி, காலேஜ் கு.ரவி, கே.காளிதாஸ், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பி.ஆர்.நாகராஜ், கு.குமார், மண்டி. பிரகாஷ், மு.கருணாமூர்த்தி, இரா. ராஜாமணி, அ.திவாகர், அ.பழனி, கே.பிரகாஷ், பி.ஜி.முருகன், கோபி. சங்கர், சென்னை.சுரேஷ், முபாரக், லயன்.ஷெரீப். கா.ஏழுமலை, எஸ். ஜாகீர், இரா.ஜோதி, கு.தியாகு, மூ.காமேஷ், ஹக்கிம்சேட், சி.கே. சசிக்குமார், கோல்டு.எஸ்.பிரபு மற்றும் மாட வீதி ஒருங்கிணைப்பாளர்கள் இல.குணசேகரன், சினம்.பெருமாள், ஆர்.கே.பி.பாஸ்கர், ஜீவரேகா விஜயராஜ், அருணை.வெங்கட் உட்பட ஆயிரக்கணக்கான தூய்மைக் காவலர்களும் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் உள்ள வறட்டு குளத்தை தூய்மை அருணை சார்பில், சீரமைக்கும் பணியினை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் தெ.பாஸ்கரபாண்டியன், திட்ட அலுவலர் இரா.மணி, டி.ஆர்.ஒ.ராமபிரதீபன், டாக்டர் எ.வ.வே.கம்பன், இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், ப்ரியா விஜயரங்கன், இரா.ஜீவானந்தம் உட்பட பலர் உள்ளனர்.

---

## அமைச்சர்கள் சிறப்புரை! கோவை தெற்கு மாவட்டத்தில்

# மேற்கு மண்டல தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் கூட்டம்!

### மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் அறிவிப்பு!

கோவை, நவ. 26-

கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடைய பிறந்த நாளை முன்னிட்டு வால்பாறை நகர மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் மற்றும் மேற்கு மண்டல திமுக ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் கூட்டமும் வால்பாறையில் இன்று (26/11/2024) காலை 10 மணி அளவில் நடைபெற இருக்கிறது.

விழாவில் மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேம்பாட்டு துறை அமைச்சர் கயல்விழி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மதிவேந்தன், துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி., மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான ஆ. கிருஷ்ணசாமி, மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்கள்.

எனவே கோவை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் பகுதி வட்ட கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



வக்ஃப் வாரிய சட்டத் திருத்த மசோதாவை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட நாடாளுமன்ற கூட்டுக் குழு கூட்டம் முறைப்படி நடைபெறுவதில்லை என நேற்று (25.11.2024) நாடாளுமன்ற மக்களவை சபாநாயகர் அவர்களைச் சந்தித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆதாரத்துடன் புகார் அளித்தார்கள். மேலும் கூட்டுக் குழுவின் அலுவல் நாட்களை நீட்டித்துத் தருமாறு கோரிக்கையும் வைத்தார்கள். அப்போது இக்குழுவில் இடம்பெற்றுள்ள நாடாளுமன்றக் கழக கொறடா ஆ.ராசா எம்.பி. மற்றும் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா எம்.பி. ஆகியோரும் உடன் இருந்தனர்.